வாசிக்க: சங்கீதம் 138:1-8

***"நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள்; தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள்; உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியைப் பொழியுமட்டும் அவரைத் தேடக் காலமாயிருக்கிறது" (ஓசி 10:12)***

பழைய ஏற்பாட்டின் எழுப்புதல் அல்லது சீர்திருத்தக் காலங்களில் திருவசனத் தியானமும் ஆராய்ச்சியும் பெரும்பங்கு வகித்துள்ளன. யோசியா ராஜா, எஸ்றா ஆகியோர் மூலம் ஏற்பட்ட சீர்திருத்தம் இதற்குச் சான்று (2 இரா 22:8-11; எஸ்றா 7:10). உணவும் தண்ணீருமல்ல, திருவசனம் கிடையாப் பஞ்சம் உருவாகுமென ஆமோஸ் தீர்க்கதரிசனம் உரைத்தார் (ஆமோஸ் 8:11,12). ஏற்கெனவே அப்பஞ்சம் வந்துவிட்டதென எண்ணுகிறேன்.

உயிர்த்தெழுந்த ஆண்டவர் ஒரு சந்தர்ப்பத்தையும் நழுவவிடாது தமது சீடருக்கு வேதவாக்கியங்களை விளக்கிக் காண்பித்து அவர்களை வரவிருந்த அருள் மாரிக்கு ஆயத்தப்படுத்தினார். எம்மாவூருக்குப் போய்க்கொண்டிருந்த சீடருக்கு, மோசே முதலிய எல்லா தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்கள் எல்லா வற்றிலும் தம்மைக்குறித்து சொல்லியவைகளை விவரித்துக் காண்பித்தார். (லூக் 24:27). எருசலேமில் சீடர்களுக்குத் தரிசனமானபோது "மோசேயின் நியாயப்பிரமா ணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும்" தம்மைக் குறித்து எழுதப்பட்டவைகளின் நிறைவேறுதலை விளக்கிக் காண்பித்தார் (லூக் 24:44).

பரிசுத்த ஆவியானவருக்காகக் காத்திருந்த சீடரும் மறைநூலிலுள்ள பல்வேறு பகுதிகளைத் தியானித்துக்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, "யூதாசைக் குறித்துப் பரிசுத்த ஆவியானவர் தாவீதின் வாக்கினால் முன்சொன்ன வேதவாக்கியம் நிறைவேறவேண்டியதாயிருந்தது. சங்கீதப் புத்தகத்திலே ... அவனு டைய கண்காணிப்பை வேறொருவன் பெறக்கடவன் என்றும் எழுதியிருக்கிறது" என்பது அவர்களது நினைவுக்கு வந்தது. எனவேதான், யூதாசிற்குப் பதிலாக ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்கள் (அப் 1:15,16,20).

பல பிரசங்க பீடங்களிலிருந்து இன்று நாம் கேட்பதெல்லாம் சிங்கப்பூர் சம்பவங் களும், அமெரிக்க அனுபவங்களும்தான். திருவசன விளக்கம் மிக மிகக் குறைவு. வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டு வியாக்கியானிப்பது மறைந்த கலையாயிற்று. எல்லாமே இலகுவாக இருக்க மக்கள் விரும்புகின்றனர். தமது வசனத்திற்குக் கொடுக்கவேண்டிய இடத்தை மக்கள் கொடுக்கும்போதுதான் கடவுள் எழுப்புதல் ஆசீர்வாதங்களைப் பொழிந்தருளுவார் (ஏசா 66:1,2). வசனத்தைத் தவிர இன்று நாம் கண்ணால் காணும் யாவும் அநித்தியமானவைகளே. வசனமே விதை; ஆவி யானவரே மழை (ஏசா 30:23).

*வேதமே, என்ன சொல்லுவேன் ? — நின் மாட்சியை*
*கண்முன் நீ எழுத்தானால் கரையிலா ஞானம்;*
*காந்தி நற்பனி மழை கசிந்திடும் வானம்;*
*புண் மனமுடை யோர்க்குப் புகழருந் தானம்;*
*புசித்திடக் கசித்திட ருசித்திடும் பானம்! (கீர்த்தனை)*
*— ஞா. சாமுவேல் ஐயர், தரங்கம்பாடி*